# <u>நீர்வளத்துறை</u>

<u>நாள். 05.11.2024</u>

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களின் தலைமையில், நீர்வளத்துறை பொறியாளர்களுடன் தலைமைச் செயலகத்தில் இன்று (05.11.2024), கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து சிறப்பு கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் நீர்வளத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து அறிவிப்புப் பணிகளையும் துரிதப்படுத்தி டிசம்பர் 2025-குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறும் மற்றும் நீர்த்தேக்கங்கள், ஏரிகளின் கதவுகளை பராமரிக்கும் பணிகளை தொடர்ந்து கண்காணிக்கும்படியும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க. மணிவாசன், இ.ஆ.ப., திட்ட இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர், தென்காசி சு. ஜவஹர், இ.ஆ.ப., நீர்வளத்துறையின் அரசு கூடுதல் செயலாளர், திருமதி. சு. மலர்விழி, இ.ஆ.ப., முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு. சா. மன்மதன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திருமதி. மு. ஜானகி மற்றும் அனைத்து சென்னை மண்டல பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.